பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 06 2024 7 15

செவ்வாய்க்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள்

- விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- கிராம பஞ்சாயத்து தலைவர்கள் யோகாசன பயிற்சி மற்றும் சிறுதானியங்களின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.
- நாடாளுமன்ற கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது தொடர்பாக மத்திய அமைச்சர்களின் கூட்டம் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.
- நாட்டின் வடமாநிலங்களின் மின் தேவையை பூர்த்தி செய்ய உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மத்திய மின்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*----இனி விரிவான செய்திகள்---*

[]<<<>>>[]

பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் 17-வது தவணையாக 20 ஆயிரம் கோடி ரூபாயை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று மாலை விடுவித்தார்.

வாரணாசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விடுவிக்கப்பட்ட இந்த தொகை நாடு முழுவதிலும் உள்ள ஒன்பது கோடியே 26 லட்சம் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் விவசாய தொழில்நுட்ப பயிற்சி பெற்ற சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 30 ஆயிரம் பெண்களுக்கு க்ரிஷி சகி சான்றிதழ்களையும் திரு நரேந்திரமோடி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று தெரிவித்தார்.

பிரதமர் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் வாரணாசியிலிருந்து நிதியை விடுவிக்கும் நிகழ்ச்சியை காணொலி வாயிலாக நாமக்கல்லில் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை இணை அமைச்சர் Shobha Karandlaje பார்வையிட்டார்.

பின்னர் விவசாயிகளிடையே உரையாற்றிய அவர், பிரதமர் திருந ரேந்திரமோடி விவசாயிகளுக்கு உயர் முன்னுரிமை அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தில் இந்த திட்டத்தின் கீழ் அதிக அளவில் விவசாயிகள் பயனடையச் செய்ய வேண்டுமென்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாக் கூறினார்.

எவ்வித பாகுபாடுமின்றி தகுதியுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பிரதமரின் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டு வருவதாகவும் சோபா Karandlaje தெரிவித்தார்.

பிரதமர் விடுவித்துள்ள இந்த தவணைத் தொகை விவசாயிகளுக்கு பெரும் பயனை தரும் என்று அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - விவசாயி ) 35------ செகண்ட்*

[]<<<>>>[]

கிராம பஞ்சாயத்து தலைவர்கள் யோகாசன பயிற்சி மற்றும் சிறுதானியங்களின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி ஒட்டுமொத்த ஆரோக்கிய வளர்ச்சியை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டுமென பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

கிராம பஞ்சாயத்து தலைவர்களுக்கு பிரதமர் எழுதியுள்ள கடிதத்தில், பஞ்சாயத்து வளாகங்கள், பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், சுகதார மையங்கள், உள்ளிட்ட இடங்களில் யோகா பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இதுபோன்ற பயிற்சி மக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தை அளித்து மன அழுத்தமில்லா வாழ்க்கை முறையை கடைபிடிப்பதற்கு உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பத்தாவது சர்வதேச யோகா தினத்தையொட்டி கிராமப் பகுதிகளில் வசிக்கும் அனைத்து மக்களுக்கும் தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதாகக் கூறியுள்ள பிரதமர், உலக அளவில் கொண்டாடப்படும் யோகா திருவிழா மக்களுடைய வாழ்க்கையில் நேர்மறையான பயன்களை அளித்திடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த ஆண்டின் சர்வதேச யோகா தின கருப்பொருளாக தனக்கும், சமூகத்துக்குமான யோகா என தெரிவு செய்யப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆரோக்கியமான தேசத்தை உருவாக்க மத்திய அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தொன்மை சிறப்புமிக்க கலாச்சாரம் அளித்த கொடையாக யோகாசனம் உள்ளது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

ஊட்டச்சத்துமிக்க உணவை மக்கள் உண்டு பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் சிறுதானிய வகைகளை ஊக்குவிக்கும் ‘ஸ்ரீஅன்ன’ இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் திரு நரேந்திரமோடி அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

நாடாளுமன்ற கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது தொடர்பாக மத்திய அமைச்சர்களின் கூட்டம் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

திரு ராஜ்நாத்சிங்கின் இல்லத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், மத்திய அமைச்சர்கள் திரு மனோகர்லால், திரு தர்மேந்திரபிரதான், திரு கிரண் ரிஜிஜூ, டாக்டர் எஸ் ஜெய்சங்கர், திரு சிராக் பாஸ்வான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நாடாளுமன்ற கூட்டத்தொடரில் தேசிய ஜனநாயகக் கூட்டணி உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

[]<<<>>>[]

ஹரியானா மாநிலத்தில் மத்திய அரசு கொண்டு வந்துள்ள மூன்று குற்றவியல் நடைமுறைச் சட்டங்களை அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் நடைமுறைக்குக் கொண்டு வருவது குறித்து அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்க மாநில அரசு குருகிராமில் ஏற்பாடு செய்துள்ளது.

ஐ ஏ எஸ் அதிகாரிகள் மற்றும் ஹரியானா அரசு அதிகாரிகளுக்கு இந்த பயிற்சி வழங்கப்படுவதாக அம்மாநில தலைமைச் செயலர் திரு டி வி எஸ் என் பிரசாத் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

நாட்டின் வடமாநிலங்களின் மின் தேவையை பூர்த்தி செய்ய உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மத்திய மின்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன் எப்போதும் இல்லாத அளவுக்கு வளர்ச்சி காரணமாக கடுமையான மின் தேவை வட மாநிலங்களில் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஈடுகட்ட நாட்டின் இதர பகுதிகளிலிருந்து 30 சதவீதம் வரை மின்சாரம் பெறப்பட்டு மின் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளது.

நேற்று வட மாநிலங்களில் அதிகபட்ச அளவாக 89 ஹிகாவாட் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதகாவும் மத்திய மின்துறை அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

[]<<<>>>[]

சென்னையில் நடைபெற்றுவரும் மும்பை சர்வதேச திரைப்பட விழாவில் இன்று சிறப்பு நிகழ்ச்சியாக பிரபல திரைப்பட கலைஞர்களுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அமெரிக்க திரைப்பட இயக்குனர் சார்லி ஹமில்டனின், Billy And Molly என்ற நீர்நாய்கள் பற்றிய ஆவணப்படம் இன்.று திரையிடப்பட்டது

தேசிய திரைப்பட போட்டியில் வெற்றிபெற்ற ஜி எஸ் உன்னிகிருஷ்ண நாயரின் Web Of Life என்ற திரைப்படம், இதில் திரையிடப்பட்டது

இன்றைய சிவப்பு கம்பள வரவேற்பு நிகழ்ச்சியில், திரைப்பட திறனாய்வு அமைப்பின் துணைத்தலைவர் திரு ராமகிருஷ்ணன், மாநில கல்வித்துறையின் செயலர் திரு ஆனந்த் பாட்டீல், நடிகர்கள் விஜய் ஆதிராஜ், ஜி. சுந்தர், ஷைலஜா செட்லூட் உள்ளிட்ட பல பிரபலங்கள் கலந்துகொடனர்,

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர் ஒருவர் இந்த திரைப்படவிழா பயனுள்ளதாக அமைந்திருந்ததாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - 25----செகண்ட்ஸ்)*

இந்த திருவிழா வரும் 21-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

[]<<<>>>[]

இந்திய வனப்பகுதியை பாதுகாப்பது மற்றும் வன உயிரினங்கள் குறித்த குறும்படங்களை அதிக அளவில் உருவாக்க வேண்டுமென்று பிரபல திரைப்பட ஒலிப்பதிவாளர் திரு அல்போன்ஸ் ராய் வலியுறுத்தியுள்ளார்.

மும்பையில் நடைபெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாவில் உரையாற்றிய அவர், இந்திய வனப்பகுதிகளில் உள்ள விலங்குகளை காட்சிப்படுத்தி ஒளிபரப்ப தொலைக்காட்சி நிறுவனங்கள் மிகுந்த ஆர்வமுடன் உள்ளதாகத் தெரிவித்தார்.

திரைப்படத் தயாரிப்பில் நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்திய அவர், இயற்கையையும், இயற்கை வளங்களையும் பாதுகாப்பது குறித்த நேர்மறையானவற்றை படங்களாக பதிவு செய்து காட்சிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அதிகரித்து வரும் மக்கள் தொகை காரணமாக அதிக அளவு வனப்பகுதி மனித பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதால் மனிதர்களுக்கும், விலங்குகளுக்குமான மோதல் அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி அதற்கான தீர்வுகளைக் காண வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

மாணவர்களிடையே இயற்கை மற்றும் வன உயிரினங்களையும் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று திரு அல்போன்ஸ்ராய் கூறினார்.

[]<<<>>>[]

மேற்குவங்க மாநிலம் டார்ஜிலிங் மாவட்டத்தில் ரயில் விபத்து நேரிட்ட வழித்தடத்தில் மீண்டும் ரயில் போக்குவரத்து தொடங்கியுள்ளதாக வடகிழக்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

விபத்து நேரிட்ட பகுதி சீரமைக்கப்பட்டு இன்று காலை முதல் ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாக அது கூறியுள்ளது.

[]<<<>>>[]

தில்லியில் நெடுஞ்சாலைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் மியாவாகி முறையில் மரங்களை வளர்ப்பதற்கான திட்டத்தை தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் தொடங்க உள்ளது.

இதனை செயல்படுத்துவதற்காக, 53 ஏக்கர் நிலப்பரப்பு அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிகள், வரும் ஆகஸ்ட் மாதம் நிறைவுபெறும் என்றும் அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-4, 6-4 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் Anastasiia Gureva வை வென்றார்.

[]<<<>>>[]

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டியின் Shot gun பிரிவில் பங்கேற்பதற்கான இந்திய அணியை தேசிய துப்பாக்கிச் சுடுதல் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இந்தியாவின் பிரித்விராஜ் தொண்டைமான் தலைமையிலான இந்த அணியில் அனந்த் ஜீத் சிங், மகேஸ்வரி சௌகான், ரைசா தில்லான், ராஜேஸ்வரி குமாரி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

[]<<<>>>[]

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் செய்தி சேகரிப்பதற்கான அங்கீகாரத்தை இந்தியாவைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளர் Gitika Talukdar க்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி வழங்கியுள்ளது.

இந்த வாய்ப்பை பெறும், இந்தியாவின் முதலாவது பெண் பத்திரிகையாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

[]<<<>>>[]

பின்லாந்தின் துர்குவில் நடைபெற்று வரும் உலக தடகளப் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ்சோப்ரா இன்று பங்கேற்கிறார்.

காயம் காரணமாக ஓய்வில் இருந்து வந்த அவர், தற்போது இப்போட்டியில் கலந்து கொள்கிறார்.

[]<<<>>>[]

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Prarthana Thombare நெதர்லாந்தின் Arianne Hartono இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

தென்ஆப்ரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆர்யன் ஷா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*End of News*